# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 10, திருவள்ளுவர் ஆண்டு–2053

## 2022 மார்ச் 24, வியாழக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை*
*இன்மை புகுத்தி விடும்."*

*முயற்சி இல்லாமல் எதுவும் இல்லை. முயற்சிதான் சிறப்பான செயல்பாடுகளுக்குக் காரணமாக அமையும்.*

## 1. வினாக்கள்–விடைகள்

### (உடுக்குறியிடாத வினாக்கள் (முதலாவது பட்டியல்)@

**[குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 2. தகவல் கோரல்

### (அ) ஆலங்குளம் பேரூராட்சி மற்றும் விராலிமலை ஊராட்சி, குடிநீர் அளவினை உயர்த்தி வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.*

**திரு. பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலங்குளம் தொகுதியிலுள்ள ஆலங்குளம் பேரூராட்சியில் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு*

---

@ *319 முதல் 400 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.*

[திரு. பால் மனோஜ் பாண்டியன்] [2022 மார்ச் 24

இருக்கின்ற இந்தச் சூழ்நிலையினை, நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து, 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு ஆய்வுகளை அங்கே மேற்கொள்வதற்கு உத்தரவிட்டிருந்தாலும், இப்போது, வருகின்ற கோடையில் கடுமையான வறட்சி இருக்கின்ற, குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கின்ற சூழ்நிலையில், உடனடியாக அதற்கான பணிகளைத் துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். இரண்டிற்கும் சேர்த்து ஒரே அமைச்சர் பதில் சொல்கின்றார்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்றத் தொகுதி, குறிப்பாக விராலிமலை ஊராட்சியில் நாளொன்றுக்கு 3,20,000 லிட்டர் அளவுக்கு தண்ணீர் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் வாயிலாகக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. இப்போது மக்கள்தொகை 25,000—க்கும்மேல் இருக்கின்ற காரணத்தாலும் வளர்ந்து வரக்கூடிய தொழில் நகரமாகவும், கோவில் நகரமாகவும் இருக்கக்கூடிய காரணத்தாலும் பொதுமக்களுடைய தேவையையும் கருத்தில்கொண்டு, அதை நாளொன்றுக்கு 7 இலட்சம் லிட்டராக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டு மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். உரிய தொகையை ஊராட்சி மன்றம் கட்டுவதற்கு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கூடுதலாக, அது பேரூராட்சியாக வரும் காலத்தில் அதைத் தரமுயர்த்துவதற்கு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு விராலிமலை சட்டமன்ற உறுப்பினர் ஒரு கருத்தை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். 1995 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட காவேரி கூட்டுக் குடிநீர்த்

*2022 மார்ச் 24]* [திரு. கே.என். நேரு]

*திட்டத்தின் வாயிலாக புதுக்கோட்டை நகராட்சி, வள்ளியூர், விராலிமலை உள்ளிட்ட 15 கிராமங்களுக்கும் தினமும் 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 1995 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைத்த திட்டம் என்ற காரணத்தால்* PVC *பைப்களில் ஆங்காங்கே கசிவுகள் ஏற்பட்டு, ஒவ்வொரு முறையும் அதைச் சீரமைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.*

*அதனால்தான் அன்னவாசல், குன்னாண்டார்கோவில், பொன்னமராவதி, திருமயம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 1,094 குடியிருப்புகளுக்கும் ஜல்ஜீவன் மிஷன் திட்டத்தின்கீழ் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் காவேரியை நீராதாரமாகக் கொண்டு ஒரு புதிய திட்டத்திற்கு 30–6–2022–க்குள்* Detailed Project Report *தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். விராலிமலை மட்டுமல்ல; புதுக்கோட்டை நகரத்திலும் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. அதனால்தான் இந்தத் திட்டத்தை இப்போது தொடங்கியிருக்கிறோம். எவ்வளவு விரைவாக அதைச் சீர் செய்து தர முடியுமோ அவ்வளவு விரைவாகத் தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*அதேபோல ஆலங்குளம் தொகுதி குறித்து நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நேற்றைய முன்தினமே கமிஷனர் அவர்களுக்குச் சொல்லப்பட்டு, விரைவாக இந்தப் பணியை முடித்து, இருக்கின்ற திட்டத்தில் குடிநீரை அதிகப்படுத்தித் தருவதற்கு உரிய பணியைச் செய்து தருமாறு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். விரைவில் அது சரிசெய்து தரப்படும்.*

## (ஆ) கன்னியாகுமரி–களியக்காவிளை மற்றும் காவல்கிணறு-நாகர்கோவில் சாலைப் பணிகளை விரைவுபடுத்துதல் மற்றும் இழப்பீடு வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் ஒரு வளமான மாவட்டம். அதிகமான ஜனப்பெருக்கம் உள்ள மாவட்டம். அந்த மாவட்டத்தில் 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 4 வழிச் சாலை, கன்னியாகுமரி முதல் களியக்காவிளை, கேரளா பார்டர், காவல்கிணறு முதல்*